**வரையறுத்த ரத்னா புரபேட்டி ஹோல்டிங் கம்பனி – 2022/2023**

----------------------------------------------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 பாதகமான அபிப்பிராயம்

வரையறுத்த ரத்னா புரபேட்டி ஹோல்டிங் கம்பனியின் 2023 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்ட மற்றும் ஏனைய விபரமான வருமான கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டு கொள்கைகளுக்குரிய தகவல்கள் உள்ளடங்கலாக நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களை உள்ளடக்கிய, 2023 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக கம்பனியின் நிதிக்கூற்றுக்களின் ஊடாக 2023 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை மற்றும் காசுப்பாய்ச்சலினை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாக மற்றும் நியாயமான நிலைமையினை பிரதிபலிக்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது பாதகமான அபிப்பிராயத்தை விபரிக்கிறேன்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு செய்யப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாடுகளை தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனியை தொடர்ந்து நடாத்திச் செல்லும் ஆற்றலினை தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாவதுடன், முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்நியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையில் கணக்கீடு செய்தல் மற்றும் கம்பனியின் தொடர்ந்தியங்கும் தன்மைக்குரிய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறைமை தொடர்பாக பரீட்சிக்கும் பொறுப்பு, தொடர்புபட்ட தரப்பினர்களால் வகிக்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம், கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனியின் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளினை முறையாக பேணுதல் வேண்டும்

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு

பாதகமான அபிப்பிராயத்திற்காக ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட அபிவிராயத்திற்கு அடிப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையையும் மதிப்பீடு செய்தல்

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக கம்பனியின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவனத்திற்கு உள்ள ஆற்றல் தொர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல், பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு

வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன், அந்த வெளிப்படுத்தல்கள் போதியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இயலுமான அளவில் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன், அலுவலகம் இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும்,

- கம்பனி வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும், பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 ஜுலை 07 திகதி முதல் நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் 99 ஆண்டு குத்தகை அடிப்படையில் நிர்மாண செயற்திட்டமொன்றிற்கான காணியை பெற்றுக் கொள்ளும் போது கைச்சாத்திடப்பட்ட இலக்கம் 1863 கொண்ட குத்தகை உடன்படிக்கையில் குறிப்பிடப்படும் நிபந்தனை பிரகாரம் 2023 மார்ச் 31 திகதிக்கு குறித்த நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு செலுத்த வேண்டிய | 2021 ஜுலை 07 திகதி முதல் நகர அபிவிருத்தி அதிகாரசபை உடன் கைச்சாத்திட்ட 99 ஆண்டு குத்தகை அடிப்படையில் காணி பெற்றுக் கொள்ளும் போது கைச்சாத்திடப்பட்ட இலக்கம் 1863 கொண்ட குத்தகை உடன்படிக்கையின் பிரகாரம் முற்பணமாக செலுத்த வேண்டிய 25 சதவீதமான ரூபா 155,000,000 தொகையை 2021/2022 | குறித்த செலவை கணக்கீடு செய்யும் போது உடன்படிக்கை பிரகாரம் காலப் பகுதிகளிற்குரிய மொத்த செலவையும் கணக்கீடு செய்ய நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | மீதி ரூபா 17,589,188 தொகை குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும், மேற்படி உடன்படிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்குரியதாக குத்தகை வாடகை, நில வாடகை மற்றும் காலாவதி ஆவதற்கான தண்டப்பண செலவு ரூபா 4,826,110 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததால் நடைமுறை ஆண்டின் நட்டம் அப் பெறுமதியால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | நிதியாண்டில் தீர்த்துள்ளதால் முதலாம் தவணைத் தொகையை மீளாய்வாண்டு முதல் செலுத்தும் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களில் குறிப்பிட நடவடிக்கை எடுப்பதென. | எடுக்க வேண்டும். |
| (ஆ) | தாய்க் கம்பனி துணைக் கம்பனிக்கு வழங்கியிருந்த ரூபா 400,000,000 கடன் தொகைக்குரிய வட்டி செலவாக கணக்கீடு செய்திருந்த ரூபா 13,686,945 பெறுமதியை கணிப்பிட்டமை தொடர்பான தகவல்களை கணக்காய்விற்கு வழங்க தவறியதால் அந்த வட்டி செலவின் சரியான தன்மையை கணக்காய்வின் போது உறுதி செய்து கொள்ள முடியவில்லை. | கணக்காய்வு அவதானிப்பின் மூலம் சுட்டிக் காட்டியுள்ளவாறு வரையறுத்த ரக்னா பாதுகாப்பு இலங்கை கம்பனியினால் அரச வங்கி ஒன்றிடமிருந்து பெற்றிருந்த கடன் தொகையை 2022 மே 24 மற்றும் 26 ஆகிய திகதிகளில் தீர்த்து மீண்டும் அதே திகதி அத் தொகையையே கடனாக பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பின்னர் 2022 செப்டம்பர் 08 திகதி மொத்த கடன் தொகையையும் தீர்த்துள்ளதுடன், 2022 செப்டம்பர் 07 திகதி வரை கடன் தொகைக் குரிய வட்டித் தொகையான ரூபா 13,686,945 இனை கணக்கீடு செய்துள்ளதென. | ஆண்டிற்குரியதாக கணக்கீடு செய்த பெறுமதியை உறுதி செய்ய தேவையான ஆவணங்களை உரியவாறு பராமரிக்க நடடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.2 அமைப்பின் தொடந்தியங்கும் தன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களின் கீழ் இலக்கம் 2.7.2 மற்றும் 2.8 மூலம் கம்பனியின் தொடந்தியங்கும் தன்மை தொடர்பான விடயங்களை தெளிவுபடுத்தியிருந்த போதும் 2022/2023 நிதிக் காலப்பகுதி இறுதி திகதியன்று நடைமுறை விகிதம் 0.000085:1 ஆனமை, தேறிய சொத்து பெறுமதி ரூபா 166,201,424 ஆன மறை பெறுமானத்தை கொண்டமை மற்றும் அது கடந்த ஆண்டிற்கு ஒப்பாக 63 சதவீதத்தால் சீரற்றதாக அதிகரித்திருந்தமை, சொத்துக்கள் மீதான வருவாய் விகிதம் பூச்சிய பெறுமானத்தை கொண்டுள்ளமை, | 2015 ஆண்டில் இடைநடுவே நிருத்தப்பட்ட இந்த செயற்திட்டத்தை புதிய வடிவில் 2020 ஆண்டில் கலப்பு அபிவிருத்தி வணிக அலுவலக கட்டிடத் தொகுதி செயற்திட்டம் ஒன்றாக திருத்தி மீண்டும் நிர்மாணம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் செயற்திட்டத்திற்கு ரூபா 5.5 பில்லியன் கடனை பெற்றுக் கொள்ள அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ள போதும், கடன் தொகையை பெற்றுக் கொள்வதனை பரிந்துரைப்பதில்லை என பாதுகாப்பு அமைச்சின் மூலம் அறிவித்ததன் மீது அந்த கடன் தொகையை பெற்றுக் கொள்ள | நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது தொடந்தியங்கும் தன்மை தொடர்பில் மேற்கொள்ளப்படு ம் தாக்கம் தொடர்பாக மிகக் கவனத்துடன் செயற்பட்டு நிதிக்கூற்றுக்களை தயாரிக்க வேண்டும். |

போன்ற முக்கிய நிதி விகித பெறுமானங்கள் பாதகமான மட்டத்தில் காணப்பட்டன. மேலும், வரையறுத்த ரத்னா புரபேட்டி ஹோல்டிங் கம்பனியை நிறுவிய நோக்கமான வணிக அலுவலக கட்டிடத் தொகுதியை நிர்மாணிப்பதற்காக நிதியை ஈட்டிக் கொள்வதற்கு இயலாத நிலைமை ஏற்பட்டிருந்தமை, வணிக அலுவலக கட்டிடத் தொகுதி நிர்மாணிக்கப்பட்டுள்ள காணியின் உரிமையை கொண்டுள்ள நகர அபிவிருத்தி அதிகாரசபையுடன் கைச்சாத்திட்டுள்ள உட்படிக்கை நிபந்தனைகள் மீறப்பட்டமை மற்றும் அந்த உடன்படிக்கை இடைநிருத்தப்பட்டமை, மீளாய்வாண்டில் கம்பனியின் செயற்பாடுகளை முழுமையாக நிறுத்தியமை போன்ற நிலைமைகளின் மீது மேற்குறித்த குறிப்புக்கள் மூலம் மேற்கொண்டுள்ள வெளிப்படுத்தல்கள் சரியானவை அல்ல என அவதானிக்கப்பட்டது.

முடியாதுள்ளது. நிர்மாண செயற்திட்டத்திற்கான காணி பெற்றுக் கொள்வது தொடர்பாக நகர அபிவிருத்தி அதிகாரசபையுடன் கைச்சாத்திட்ட உடன்படிக்கை நிபந்தனை மீறப்பட்டமை மற்றும் செயற்திட்டத்தை நடாத்திச் செல்ல கம்பனிக்கு நிதி ரீதியான இயலுமை இல்லாததால் பொறுத்தமான முதலீட்டாளர் ஒருவரை இனங்கண்டு செயற்திட்டத்தை ஒப்படைக்க அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. 2022/2023 நிதியாண்டில் வரையாறுத்த ரக்னா புரபேட்டி ஹோல்டிங் கம்பனியின் செயற்பாடுகள் முழுமையாக நிருத்தப்படாததுடன், வணிக அலுவலக கட்டிடத் தொகுதியை நிர்மாணிக்கும் செயற்திட்டம் மாத்திரம் நிருத்தப்பட்டுள்ளது. இச் செயற்திட்டத்திற்கு பொறுத்தமான முதலீட்டாளர் ஒருவரை இனங்கண்டு ஒப்படைப்பை நிறைவு செய்யும் வரை கம்பனியை நடாத்திச் செல்ல வேண்டியதால் 2022/2023 நிதிக்கூற்றுக்களை தொடர்ந்து இயங்கும் அடிப்படையின் கீழ் மேற்கொண்டுள்ளதென.

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பற்றுடன் இணங்காமைகள்

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2007 இன் 07 கொண்ட கம்பனி சட்டம் | | | |
| (அ) 150 (1) பிரிவு | ஐந்தொகை திகதியிலிருந்து 06 மாதங்களிற்குள் அல்லது கம்பனி பதிவாளரினால் நிர்ணயிக்கப்பட்ட நீடிக்கப்படும் காலப் பகுதியினுள் குறித்த கம்பனியின் நிதிக்கூற்றுக்களை சட்டத்தின் 151 பிரிவின் மூலம் குறிப்பிட்டுள்ளவாறு | 2022/2021 நிதியாண்டிற்கான நிதிக்கூற்றுக்களை உரிய காலப் பகுதியினுள் தயாரித்து கணக்காய்விற்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்காத காரணத்தால் அதன் பின்னர் மேற்கொள்ள வேண்டிய | சட்டத்தில் குறிப்பிடப்படும் ஏற்பாடுகள் பிரகாரம் நிதிக்கூற்றுக்களை தயாரித்து உரிய திகதிக்கு சமர்ப்பிக்க நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | உண்மையாக மற்றும் நியாயமான காட்சியை பிரதிபலிக்கும் வகையில் தயாரிப்பதனை முகாமைத்துவம் மேற்கொள்ள வேண்டிய போதும் கணக்காய்விற்கு உட்படும் கம்பனியினால் 2023 மார்ச் 31 திகதியுடன் முடிவடைந்த காலப் பகுதிக்கான நிதிக்கூற்றுக்களை ஐந்தொகை திகதி முடிவடைந்து 06 மாதங்களிற்குள் அல்லது கம்பனி பதிவாளரினால் நிர்ணயிக்கப்பட்ட நீடிக்கப்படும் காலப் பகுதியினுள் தயாரித்து இருக்கவில்லை. | எதிர்வரும் அனைத்து செயற்பாடுகளும் தாமதிப்பதனை தவிர்க்க முடியாததன் மீது 2023/2022 நிதிக்கூற்றுக்களையும் எதிர்பார்த்த திகதிக்கு முன்னர் கணக்காய்விற்கு சமர்ப்பிக்க இயலாதுள்ளது. அவ்வாறே எதிர்காலத்தில் நிதிக்கூற்றுக்களை உரிய திகதிக்கு சமர்ப்பிக்க இயலாது போனால் 2007 இலக்கம் 07 கொண்ட கம்பனி சட்டத்தின் 150 (1) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதென. | எடுக்க வேண்டும். |
| (ஆ) 220 பிரிவு | கம்பனியொன்றின் தேறிய சொத்துக்கள் அக் கம்பனியின் வெளியிடப்பட்ட மூலதனத்தின் சரி பாதியை விட குறைவானதென தோன்றும் சந்தர்ப்பத்தில் கம்பனிக்கு ஏற்பட்டுள்ள நட்டங்களின் தன்மை மற்றும் அளவு, கம்பனிக்கு ஏற்பட்டுள்ள நட்டத்திற்கு காரணம் அல்லது காரணங்கள், மற்றும் அவ்வாறான நட்டம் தொடர்ந்தும் ஏற்படுவதனை தவிர்ப்பதற்காக அல்லது ஏற்பட்ட நட்டத்தை ஈடுசெய்து கொள்வதற்காக ஏனும் பணிப்பாளர் சபையினால் ஏதேனும் நடவடிக்கை எடுத்திருந்தால் அந்த நடவடிக்கை தொடர்பாக பங்குதாரர்களிரிற்கு அறிவித்து பணிப்பாளர் சபையினால் அறிக்கையொன்றை தயாரித்து அந்த அறிக்கையுடன் அந்த கம்பனி பங்குதாரர்களின் அதிவிசேட பொதுக் கூட்டமொன்றை கம்பனி பணிப்பாளர் சபையினால் கூட்டப்பட வேண்டும். | வரையறுத்த ரக்னா புரபேட்டி ஹோல்டிங் கம்பனியின் (RPHL) 100 சத வீத பங்குரிமை வரையறுத்த ரக்னா பாதுகாப்பு இலங்கை கம்பனிக்கு (RALL) உரியதெனவும், தற்போதைய கட்டுப்பாட்டு சபையினால் RPHL இல் நிலவும் நெருக்கடியான தன்மை தொடர்பாக RALL (பங்குரிமையாளர்) பணிப்பாளர் சபை கூட்டங்களில் தொடர்ந்தும் கலந்துரையாடப்பட்டுள்ளது. இந்த நிர்மாண செயற்திட்டத்தை தொடர்ந்தும் மேற்கொண்டு செல்ல நிதி இயலுமை இல்லாததால் பொறுத்தமான முதலீட்டாளரை இனங்கண்டு செயற்திட்டத்தை ஒப்படைக்க தேவையான அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. நிலவும் | கம்பனி சட்டத்தில் குறிப்பிடப்படும் ஏற்பாடுகள் பிரகாரம் அறிக்கை ஒன்றை தயாரிக்க மற்றும் கூட்டம் ஒன்றை கூட்டவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | |
|---|---|
| எனினும் வரையறுத்த ரக்னா புரபேட்டி ஹோல்டிங் கம்பனியின் மீளாய்வு நிதியாண்டினுள் ரூபா 166,201,434 ஆக தேறிய சொத்துக்கள் பெறுமதி மறை பெறுமதியாக இருக்கையில் அப்பிரமாணம் பிரகாரம் அறிக்கையொன்றை தயாரிக்க அல்லது கூட்டமொன்றை கூட்ட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பிரச்சினையான நிலைமைகளை தற்போது படிப்படியாக தீர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன் அந்த பிரச்சினைகளை தீர்த்துக் கொண்ட பின்னர் RPHL தொடர்பான முன்நடவடிக்கைகளை பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் கீழ் மேற்கொள்ள திட்டமிட்டுள்ளதென. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 64,224,933 ஆன வரிக்கு பின்னரான நட்டமொன்றானதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் நட்டம் ரூபா 101,976,502 ஆனது. அதற்கமைய நிதி விளைவுகளில் ரூபா 37,751,569 ஆன வளர்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வளர்ச்சிக்கு மீளாய்வாண்டில் நிதிக் கிரயம் கடந்த ஆண்டிற்கு ஒப்பாக ரூபா 64,833,902 ஆன அளவினால் அதாவது 68.2 சதவீதத்தால் குறைவடைந்தமை முக்கிய காரணமாக இருந்தது.

### 2.2 முக்கிய வருமான மற்றும் செலவின விடயங்களின் போக்குப் பகுப்பாய்வு

மீளாய்வு காலப் பகுதியில் கம்பனியின் மொத்த வருமானம் முன்னைய காலப் பகுதியில் அறிக்கை இடப்பட்டவாறே பூச்சிய பெறுமானமாக இருந்ததுடன் மீளாய்வு காலப் பகுதியில் முன்னைய காலப் பகுதிக்கு ஒப்பாக நிருவாக செலவுகள் ரூபா 27,082,334 இனால் அதாவது 395 சதவீதத்தினால் அதிகரித்திருந்ததுடன் நிதி செலவுகள் ரூபா 64,833,902 இனால் அதாவது 68.2 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 மார்ச் 14 திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் வணிக அலுவலக கட்டிடத் தொகுதி நிர்மாண செயற்திட்டத்தை மிகவும் சாத்தியமான கலப்பு அபிவிருத்தி செயற்திட்டம் ஒன்றாக செயற்படுத்த நகர அபிவிருத்தி அதிகாரசபையுடன் இணைந்து முறையான நடைமுறை ஒழுங்குகளை பின்பற்றி பொறுத்தமான உள்நாட்டு அல்லது வெளிநாட்டு முதலீட்டாளரை | அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் பாதுகாப்பு அமைச்சு, நகர அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் வரையறுத்த ரக்னா பாதகுகாப்பு இலங்கை கம்பனி தொடர்புகளுடன் இந்த செயற்திட்டத்திற்கு பொறுத்தமான உள்நாட்டு அல்லது வெளிநாட்டு முதலீட்டாளரை இனங்காண | அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் பொறுத்தமான முதலீட்டாளரை கண்டறிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இனங்காணுமாறு விதித்திருந்த போதும் இந்த அறிக்கை திகதி வரை அந்த விடயம் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. | தேவையான முன் நடவடிக்கைகளை நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், அவர்களினால் அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதென. | |
| (ஆ) | வரையறுத்த ரக்னா புரபேட்டி ஹோல்டிங் கம்பனிக்கு ஆளணியினரை ஈடுபடுத்துவது தொடர்பாக முறையான ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு நடைமுறையொன்று இருக்கவில்லை. மேலும், 2022/2023 நிதி காலப் பகுதியினுள் கம்பனி செயற்பாட்டு நடவடிக்கைகள் இடம்பெறாத போதும் ஆளணி அங்கத்தவர்களின் சம்பளம், ஊதியம் மற்றும் படிகளிற்காக ரூபா 5,072,899 செலவிடப்பட்டிருந்தது. | 2022/2023 நிதி காலப் பகுதியனுள் செயற்பாட்டு நடவடிக்கைகள் இடம்பெறாத போதும் இதன் நிருவாக நடவடிக்கை உள்ளடங்களாக செயற்திட்டத்திற்குரிய ஏனைய அனைத்து செயற்பாடுகளையும் தொடர்ந்து மேற்கொண்டு செல்ல நேரிட்டுள்ளதால் அந்த நடவடிக்கைகளை செயற்படுத்திய செயற்திட்ட பணிப்பாளரின் சம்பளம் மற்றும் படிகள் செலுத்துவதனை கம்பனி மேற்கொள்வதென. | கம்பனிக்காக ஒழுங்கான ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு நடைமுறைகளை தயாரித்து அங்கீகரித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.2 பெறுகைகள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தாய் கம்பனியினால் தலைமை அலுவலக கட்டிட நிர்மாண செயற்திட்டத்தை 2014 ஆண்டில் ஆரம்பித்திருந்ததுடன் நிர்மாணத்திற்கு தேவையான நிதியை பெற்றுக் கொள்ளும் மற்றும் குறித்த காணியின் உரிமை தொடர்பாக எழுந்திருந்த பிரச்சினை காரணமாக இதன் நிர்மாணப் பணிகள் 2015 ஜுலை 03 திகதி அளவில் நிருத்தப்பட்டிருந்ததுடன் அதன் பொது தாய் கம்பனியினால் ரூபா 828.3 மில்லியன் செலவை இந்த செயற்திட்டத்திற்காக செய்திருந்தது. பின்னர் வணிக அலுவலக கட்டிடத் தொகுதி நிர்மாணிக்கும் புதிய செயற்திட்டம் 2021 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக 2007 இலக்கம் 07 கொண்ட கம்பனி சட்டத்தின் கீழ் 2021 மார்ச் 08 திகதி வரையறுத்த ரக்னா புரபேட்டி ஹோல்டிங் கம்பனியின் பெயரில் இந்த துணை கம்பனி நிறுவப்பட்டிருந்ததுடன் இந்த துணை கம்பனி பதிவிற்கு முன்னர் தாய் கம்பனியின் பணிப்பாளர் சபையின் மற்றும் அமைச்சரவையின் அங்கீகாரத்தை பெறுவதற்கு பதிலாக கம்பனியை | 2014 மே 20 திகதி நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு உள்ளதுடன் காணியின் உரிமை சட்டபூர்வமாக சுவீகரிக்கப்படவில்லை. அப்போதைய முன்னால் தலைவர் உள்ளிட்ட பணிப்பாளர் சபை இக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கு தேவையான நிதி அல்லது நிதி மூலங்கள் தொடர்பாக முறையான ஆய்வினை மேற்கொள்ளாது நிர்மாணத்தை ஆரம்பித்துள்ளதுடன் கம்பனியில் நிலவிய சீரற்ற நிதி நிலைமையின் மீது 2015 ஜுலை 03 திகதியிலிருந்து நிர்மாணப் பணிகள் தற்காலிகமாக நிருத்தப்பட்டுள்ளது. முதலாம் கட்ட நிர்மாணங்களை நிருத்தும் போது ரூபா 828.36 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. | இந்த செயற்திட்டத்தை மேற்கொள்ளும் போது ஏற்பட்டுள்ள முறைகேடுகளை இனங்கண்டு அதனுடன் தொடர்புடைய தரப்பினரிற்கு எதிராக சட்டரீதியான செயற்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிறுவியதன் பின்னர் இந்த அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்திற்கான மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா 5016.87 மில்லியனாகும். இதன் மதியுரை சேவைக்காக ஒப்பந்த பெறுமதியின் 6 சதவீதமான அதாவது, ரூபா 301.01 மில்லியனிற்கு உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. இந்த நிர்மாணத்திற்காக மீளாய்வாண்டு இறுதியில் இந்த துணை கம்பனியினால் ரூபா 2334.5 மில்லியன் செலவிடப்பட்டு இருந்தது. இந்த நிர்மாணத்திற்கான ஒப்பந்ததாரரை தெரிவு செய்யும் போது பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.7, 2.8 மற்றும் 3.2 பிரிவுகளிற்கு மற்றும் 2020 மார்ச் 05 திகதிய பெறுகைகள் கைநூலின் 35 வழிகாட்டிக்கு முரணாக, மதியுரை சேவை வழிகாட்டி கைநூலின் 2.10.1 மற்றும் 3 அத்தியாயத்திற்கு முரணாக முறையே ஒப்பபந்ததாரர் மற்றும் மதியுரை கம்பனி தெரிவு செய்யயப்பட்டிருந்தன. | முன்னால் தலைவர் உள்ளிட்ட முகாமைத்துவம் எடுத்துள்ள தீர்மானம் மற்றும் தீர்மானம் தொடர்பான விடயங்களை தெளிவுபடுத்த எவ்வித பொறுப்பவாய்ந்த தரப்பினரும் தற்போது கம்பனியில் கடமையில் இல்லாததுடன் குறித்த ஆவணங்கள் உள்ளிட்ட தகவல்கள் கம்பனியிடம் காணப்படவில்லை. புதிய தோற்றத்துடன் 2020 ஆண்டில் கலப்பு அபிவிருத்தி வணிக அலுவலக கட்டிடத் தொகுதி செயற்திட்டமொன்றாக திருத்தி மீண்டும் நிர்மாணப் பணிகள் மற்றும் மதியுரை சேவை கம்பனிக்கு ஒப்படைப்பதற்காக முன்னால் தலைவர் உள்ளிட்ட முகாமைத்துவம் பெறுகைகள் குழுவொன்றை மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவொன்றை நியமித்திருக்கவில்லை.<br>முன்னால் தலைவர் /பிநிஅ உள்ளிட்ட முகாமைத்துவம் மேற்கொண்ட துரித தீர்மானங்கள் காரணமாக இவ்வாறான நிலைமை ஏற்பட்டுள்ளதுதென. | |

## 4. கண்கைளிபொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 இலக்கம் 19 கொண்ட தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) மற்றும் 16(2) பிரிவு பிரகாரம் உரியவாறு வருடாந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்க இயலுமான வகையில் கணக்கறிக்கை மற்றும் புத்தகங்களை பேணிச் செல்ல வேண்டுமெனவும் குறித்த சட்ட ரீதியான தேவைப்பாடுகளில் குறிப்பிட்டுள்ள கால எல்லையினுள் கணக்காய்வாளர் நாயகத்திற்கு கணக்காய்விற்காக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்க வேண்டுமென குறிப்பிட்டுள்ள போதும், 2023 மார்ச் 31 திகதியுடன் முடிவடைந்த நிதி காலப் பகுதிக்குரிய நிதிக்கூற்றுக்கள் | 2018 இலக்கம் 19 கொண்ட தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) மற்றும் 16(2) பிரிவு பிரகாரம் 2021/2022 நிதி ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்களை உரிய காலத்தினுள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்காத காரணத்தால் 2022/2023 நிதிக்கூற்றுக்களையும் எதிர்பார்த்த திகதிக்கு முன்னர் கணக்காய்விற்கு சமர்ப்பிக்க முடியாதுள்ளது. மேலும் | கணக்காய்வு சட்டத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களை உரிய திகதியில் தயாரித்து கணக்காய்விற்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டதானது 02 ஆண்டுகள் மற்றும் 06 மாதங்கள் கடந்த பின்னர் அதாவது 2025 ஒக்டோபர் 22 திகதி ஆகும். | 2025/2026 நிதியாண்டில் உரிய காலத்தினுள் நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிப்பதென. | |
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 இன் பந்தி இலக்கம் 13 மற்றும் 17 இல் குறிப்பிடப்படுவதன் பிரகாரம் செயற்பாட்டு நடவடிக்கைகளினால் மற்றும் நிதி செயற்பாடுகளினால் உருவாகும் காசுப்பாய்ச்சல்களை வெவ்வேறாக இனங்கண்டு காசுப் பாய்ச்சல் கூற்றில் அறிக்கையிட வேண்டிய போதும் கம்பனியினால் மீளாய்வாண்டிற்கு உரியதாக சமர்ப்பித்திருந்த காசுப் பாய்ச்சல் கூற்றினுள், ஆண்டினுள் காசாக செலுத்தியிருந்த வட்டி செலவு ரூபா 4,565,187 தொகை கூடுதலாக காண்பிக்கப்பட்ட காரணத்தால் ஆண்டிற்குரிய நிதி செயற்பாடுகளினால் உருவான தேறிய காசுப் பாய்ச்சல் அப் பெறுமதியால் குறைத்து மதிப்பிடப்பட்டிருந்ததுடன் செயற்பாட்டு நடவடிக்கையினுள் உள்ளடங்கும் செயற்படு மூலதன மாற்றலின் கீழ் அப்பெறுமதியை சீராக்கியமையால் செயற்பாட்டு நடவடிக்கைகளினால் உருவான தேறிய காசுப் பாய்ச்சலும் அப் பெறுமதியால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | காசுப் பாய்ச்சல் கூற்றை தயாரிக்கும் போது வகைப்படுத்தல் (Classification) தவறினால் இது இடம் பெற்றுள்ளதாகவும் 2023/2024 நிதி ஆண்டிற்குரியதாக காசுப் பாய்ச்சல் கூற்றை தயாரிக்கும் போது இவ்வாறான அவதானிப்புக்கள் ஏற்படுவதனை தவிர்த்து காசுப் பாய்ச்சல் கூற்றை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுப்பதென. | காசுப் பாய்ச்சல் கூற்றை தயாரிக்கும் போது இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 இல் குறிப்பிடப்படுவதன் பிரகாரம் தயாரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |